ANNEXURE - D

# தொகை மாற்றக் கருத்துரு அனுப்பவேண்டிய வழிகாட்டுதல் படிவம்

- பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்கிலிருந்து வேறொரு எண்ணிற்கு தொகை மாற்றம் செய்திட அரசு நிதித்துறை கடித எண்.44805/FIN/PGC/2008, நாள்.12.09.2015ன் படி பணியாளர்களின் பணிமாறுதல்களின் போது பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஏற்கனவே பெற்ற கணக்கு எண்ணில் பிடித்தம் செய்த தொகையை அன்னார் புதிதாக பெற்ற மற்றொரு கணக்கு எண்ணில் தொகை மாற்றம் செய்ய, தாம் முன்பு பணிபுரிந்த அலுவலகத்தின் பணம் பெற்று வழங்கும் அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- அப்பணம் பெற்று வழங்கும் அலுவலர் சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குத்தாட்களில் விடுபட்ட விவரங்கள் (M/C) ஏதேனும் இருப்பின் முதலில் அதனை online மூலம் சரிசெய்ய வேண்டும்.
- அதற்குப்பின் பணியாளர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையில் தொகை மாற்றம் செய்வதற்குரிய செயல்முறை ஆணையை வெளியிட்டு தேவையான ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்/சம்பளக் கணக்கு அலுவலருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.
- கருவூல அலுவலர்/சம்பளக் கணக்கு அலுவலர் மேற்படி ஆணையை பரிசீலித்து அவரது ஒப்புதலுடன் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
- அவ்வாறு பெறப்படும் கருத்துருக்கள் இத்துறையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொகைமாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.